128

**இலங்கை திறந்த பல்கலைக்கழகம்**
**முகாமைத்துவ கற்கைகள் பீடம்**
**மனித வள முகாமைத்துவ உயர்தர சான்றிதழ்**
**HRC2406 – மனித வள முகாமைத்துவத்துக்கான திறன்கள்**
**இறுதிப்பரீட்சை -2024**
**காலம் - 3 மணித்தியாலம்**

| **திகதி : 20/10/2024** | **நேரம் : 01.30pm - 04.30pm** |
|---|---|

**அறிவுறுத்தல்கள்:**

- வினாத்தாள் 100 புள்ளிகளுக்கான கட்டுரை வினாக்களைக் கொண்டுள்ளது.
- 06 வினாக்களில் ஏதேனும் 4 வினாக்களுக்கு விடையளிக்கவும்.
- ஒவ்வொரு வினாக்களும் 25 புள்ளிகளைக் கொண்டவையாகும்.
- தரப்பட்டுள்ள விடைத்தாளிலேயே விடையளிக்க வேண்டும்.
- தெளிவற்ற கையெழுத்து புள்ளிகளை குறைப்பதற்கு வழிவகுக்கும்.

---

**வினா இல 01.**

Stephen Covey விபரித்த அதியுயர் விளைதிறன் கொண்ட நபர்களின் 7 பழக்க வழக்கங்களை உங்களுடைய அன்றாட வாழ்க்கையின் உதாரணங்களுடன் விபரிக்குக.

(25 புள்ளிகள்)

**வினா இல 02.**

"வாழ்க்கையில் பல்வேறு சவால்கள் மற்றும் சிரமங்களை எதிர் கொள்ளும் தனிநபர்களுக்கு ஆதரவு அளிப்பதில் ஆலோசனை (counselling) மிக முக்கிய பங்கு வகிக்கின்றது." ஊழியர் ஆலோசனையிலிருந்து (employee counselling) நிறுவனங்களும், ஊழியர்களும் எவ்வாறு குறிப்பிடத்தக்களவு பயனடைவார்கள் என்பதை விளக்குக.

(25 புள்ளிகள்)

**வினா இல 03.**

மென்திறன்கள் (soft skills) என்றால் என்ன என்பதை விளக்குக, மற்றும் நான்கு பிரதான மனித வள முகாமைத்துவ செயற்பாடுகளை தந்து ஒவ்வொரு செயற்பாட்டிற்கும் மனித வள வல்லுனர்கள் அதிகம் பயன்படுத்தும் மென்திறன்களை உதாரணங்களுடன் விளக்குக.

(25 புள்ளிகள்)

**வினா இல 04**

'இன்றைய மிக வேகமான வேலைச் சூழலில், ஒரு நிறுவனத்தின் எந்த மட்டத்திலும் முகாமையாளராக சிறப்பாக செயற்பட தொழினுட்பத் திறன் மிக முக்கியமான திறனாகும்.' மேற்கண்ட கூற்றினை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா? உங்கள் காரணங்களை உதாரணங்களுடன் விளக்குக.

(25 புள்ளிகள்)

**வினா இல 05**

'மன அழுத்தம் குறைவானதாக இருக்கும் போது, அது உதவியாக காணப்படும், மற்றும் மன அழுத்தம் கடுமையாக இருக்கும் போது அது எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தும்'. ஒரு ஊழியரின் பார்வையிலிருந்து மேலே உள்ள கூற்றினை உதாரணங்களுடன் விளக்குக.

(25 புள்ளிகள்)

**வினா இல 06**

'அதிக செயலாற்றுகையை (Higher performance) அடைவது முக்கியமானது, ஆனால் நெறிமுறையுடன் ஒழுகுவது (ethically) அதைவிட மிக முக்கியமானதாகும்'. மனித வள முகாமைத்துவத்தில் நெறிமுறைகளை (ethics) நிபுணர்கள் ஏன் கருத்தில் கொள்ள வேண்டும் என்பதை உதாரணங்களுடன் விளக்குக.

(25 புள்ளிகள்)

**(25 புள்ளிகள் x 04 வினாக்கள் = மொத்தப்புள்ளிகள் 100)**

-முழுபதிப்புரிமையுடையது -